**DECEMBER 2023** **P/ID 35313/PTL1C**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு, முறையே
50 சொற்களில் விடையெழுதுக.

1. முற்படக் கிளந்த எழுதிணை எவை?

2. மாயோன் மேய உலகம் எது?

3. வேந்தன் என்று அகத்திணை யாரைச் சுட்டுகிறது?

4. பனியெதிர் பருவம் என்பது யாது?

5. சிவணிய – பொருள் கூறுக.

6. எவை மூன்றும் கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வரும்?

7. செவியறிவுறுத்தல் என்றால் என்ன?

8. மறையோர் தேய மன்றல் யாவை?

9. அல்ல குறிப்படுதல் என்றால் என்ன?

10. அம்பல், அலர் – ஒப்பிடுக.

11. எழில் – சொற்பொருள் சுட்டுக.

12. கிழவோள், கிழவோன் என்பன யாரைக் குறிப்பன?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே
250 சொற்களில் விடையெழுதுக.

13. கைக்கிளை குறித்து எழுதுக.

14. கருப்பொருள் பற்றி நீர் அறிவன யாவை?

15. 'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' விளக்குக.

16. பொருள் வயிற் பிரிதல் பற்றி விளக்குக.

17. வெட்சித் திணை நிகழ்வுகளைப் பட்டியலிடுக.

18. பாலது ஆணை என்று களவியல் கூறுவது யாது?

19. வாயில்களின் பணிகளைப் பட்டியலிடுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு, முறையே
500 சொற்களில் விடையெழுதுக.

20. பொருளதிகார அமைப்பியலை விளக்குக.

21. 'பாடல் சான்ற புலனெறி வழக்கம்' – விவரிக்க.

22. தமிழரின் அறநெறிப் போர் மரபைப் பகர்க.

23. பொருளியலால் அறியலாகும் செய்திகளைப் பட்டியலிடுக.

24. திறனாய்வியல் நோக்கில் பொருளதிகாரத்தை அணுகுக.

———————